அனலைதீவு திருவருள் மிகு ஸ்ரீ ஹரிஹரபுத்திர ஐயனார் திருக்கோயில் விசேட பொதுக்கூட்ட அறிவித்தல்

இவ் ஆலயத்துடன் அக்கறையுடைய தரப்பினர்கள் அனைவருக்கும்,

அன்புடையீர்,

இவ் ஆலயம் தொடர்பாக ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றில் நம்பிக்கைச் சொத்து 38/24 என்ற வழக்கு நடைபெற்று வருகின்ற நிலையில் குறித்த வழக்கில் இருதரப்பு சட்டத்தரணிகளின் கோரிக்கையின் பிரகாரம் கௌரவ மன்றினால் ஊர்காவற்றுறை நீதிமன்ற பதிவாளர் ஆகிய என்னை குறித்த ஆலயத்தினை நிர்வகிப்பதற்கு பெறுநராக நியமிக்கப்பட்டுள்ளேன். அதன் பிரகாரம் குறித்த ஆலயத்தினுடைய செயற்பாடுகளை இலகுபடுத்துவதற்காகவும், கட்டுமானங்களை முன்னெடுத்து செல்வதற்காகவும், 25.09.2026 ஆம் திகதியன்று பெறுநரால் மன்றிற்கு அறிக்கையிடப்பட்டு அனுமதி கோரியதன் அடிப்படையில் 16.11.2026 அன்று கௌரவ மன்றினால் அனுமதி வழங்கப்பட்டது.

குறித்த அனுமதியின் பிரகாரம் பெறுநரின் கீழ் ஆலயத்தின் நாளாந்த செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும் புனர்நிர்மாண வேலைகளை முன்னெடுப்பதற்கும் ஏதுவாக 05 பேர் கொண்ட முகாமைத்துவக் குழுவையும், (வழக்காளிகள் ஐவரில் இருந்து ஒருவர், எதிராளிகளில் கடந்த நிர்வாகத்தின் முக்கிய பொறுப்புக்களை வகித்தவர்களில் இருந்து இருவர் மற்றும் ஆலயத்தின் அக்கறையுடைய தரப்பினர்களில் இருந்து இருவர்) மற்றும் கும்பாபிஷேகம் வரைக்குமான காலத்தில் கட்டுமானம் நடைபெறும் நேரங்களில் தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்காகவும், கண்காணிப்புக்களை மேற்கொள்வதற்காகவும், துறைசார்ந்தவர்களையும், அத்துடன் வட்டாரங்கள் அனைத்தினையும் பிரதிநிதித்துவப்படுத்தி 10 பேர் கொண்ட ஆலோசனைக் குழுவையும் நியமிப்பதற்கு ஏதுவாக எதிர்வரும் **09.12.2026 புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஆலய முன்றலில்** பெறுநர் தலைமையில் விசேட பொதுக்கூட்டம் நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே இவ் ஆலயத்துடன் அக்கறையுடைய தரப்பினர்கள் யாவரும் கலந்து கொண்டு குறித்த ஆலயம் வளர்ச்சி பெறுவதற்கு தங்களின் ஒத்துழைப்பை நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

2026 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 20 ஆம் திகதியாகிய இன்று.

பெறுநர்,
அனலைதீவு திருவருள் மிகு ஸ்ரீ ஹரிஹரபுத்திர ஐயனார் திருக்கோயில்,

பெறுநர்
அனலைதீவு ஐயனார் ஆலயம்
அனலைதீவு - 05.